MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

குடிபெயர்ந்த ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்








ஜனவரி 2022

## இந்த வெளியீட்டில்:


ஜனவரி 2022-இல் முக்கிய அறிவிப்பு

கொவிட்-19 தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்திட சுகாதார குறிப்புகள்

பொங்கல் கொண்டாட்டத்தின் சிறப்பம்சங்கள்

# முக்கிய அறிவிப்பு





## MRT நிலையங்களில் காகித டிக்கெட் விற்பனை நிறுத்தம்

ஜனவரி 22 முதல் MRT நிலையங்களில் காகித டிக்கெட் விற்பனை கிடையாது. பயணத்திற்குப் பணம் செலுத்த தொடர்பில்லா வங்கி அட்டைகள், EZ-Link அட்டை அல்லது NETS FlashPay அட்டையை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அறிய கீழே உள்ள காணொளியைப் பார்க்கவும்

- தமிழ் காணொளி
- பெங்காலி காணொளி




## மாறுபாட்ட ஒமிக்கிரான் தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்திடுங்கள்!

அதிகத் தொற்றுத்தன்மை உடைய மாறுபாட்ட ஒமிக்ரான் தொற்றிலிருந்து உங்களை மேலும் பாதுகாத்திட, தடுப்பூசி அல்லது பூஸ்டர் தடுப்பூசி உங்களுக்கு வழங்கப்படும் போது தயவுசெய்து அதனைப் போட்டுக்கொள்ளவும்.

பாதுகாப்பான நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்றி நடக்க நினைவில் கொள்க:

- எல்லா நேரங்களிலும் முகக் கவசத்தை அணிய வேண்டும்
- ஒரு குழுவில் அதிகபட்சம் 5 பேர் மட்டும் இருக்க
- ஒவ்வொரு நபருக்கும் இடையில் 1 மீட்டர் பாதுகாப்பான தூரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்
- உங்கள் டிரேஸ்டுகெதர் டோக்கனை உங்களுடன் எல்லா நேரங்களிலும் எல்ல இடத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும்

உங்களுக்கு உடல் நலமில்லை எனில் மருத்துவரை நாடவும்.

மேலும் தகவலுக்கு, ஆக அண்மைய சுகாதார நெறிமுறைகளை இங்கே பார்க்கவும்.

# கொவிட்-19 தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்திட சுகாதார உதவிக்குறிப்புகள்






நல்ல தனிப்பட்ட சுகாதாரத்தைப் கடைபிடிக்கவும். சோப்புடன் உங்கள் கைகளைத் தவறாமல் கழுவவும்




முகக் கவசத்தை முறையாக அணியவும்




அடிக்கடி தொடக்கூடிய இடங்களைத் தொட்டப் பிறகு கை சுத்திகரிப்பானைப் பயன்படுத்தவும்




உங்களுக்கு உடல் நலமில்லை எனில் மருத்துவ உதவியை நாடவும்




தடுப்பூசி போட்டுக்கொண்டு, பாதுகாப்பாக இருக்கவும்!

சுகாதார தொடர்பான மேலும் உதவிக்குறிப்புகளுக்கு, உங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள காணொளிகள் மற்றும் சுவரொட்டிகளைப் பார்க்க இங்கே கிளிக் செய்யவும்



## எங்களது குடிபெயர்ந்த ஊழியரிடமிருந்து ஒரு செய்தி

பங்களாதேஷைச் சேர்ந்த குடிபெயர்ந்த ஊழியர் பாதலைச் சந்திக்கலாம்.
அவர் நம்முடன் பகிர்ந்து கொள்ள விரும்புவது:

என் பெயர் பாதல். நான் சிங்கப்பூரில் சுமார் 10 வருடங்களாக வேலை செய்துள்ளேன். ஆம், நான் பூஸ்டர் தடுப்பூசியைப் போட்டுக்கொண்டு விட்டேன். பூஸ்டர் தடுப்பூசியைம் போட்டுக்கொள்வது முக்கியம்,. அது உங்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கிறது. கொவிட்-19 தொற்றை எதிர்த்து போராட உங்களுக்கு உதவுகிறது. நீங்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும், ஏனெனில் இது தொற்று மற்றும் கடுமையான நோய்களுக்கு எதிராக அதிக பாதுகாப்பு அளிக்கிறது.

# நிகழ்ச்சியின் சிறப்பம்சங்கள்



## பொங்கல்

நமது குடிபெயர்ந்த ஊழியர்களுடன் பொங்கலைக் கொண்டாட ஜனவரி 14-16 வார இறுதியில், கொக்ரேன், கிராஞ்சி மற்றும் பெஞ்ஜூரு பொழுதுபோக்கு நிலையங்களில் பல்வேறு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

நமது குடிபெயர்ந்த ஊழியர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வர, இவ்வாண்டு பொங்கல் கொண்டாட்டங்களை முன்னிட்டு பல்வேறு பொழுதுபோக்கு நிலையங்களில் நடவடிக்கைகளை ஒருங்குணைத்த எங்கள் கூட்டாளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.



குடிபெயர்ந்த ஊழியர்களுக்குக் கரும்பு விநியோகம். பருவ காலத்தில் முக்கியமான அறுவடை கரும்பு என்பதும் அது செழிப்பு மற்றும் நல்வாழ்வைக் குறிக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியுமா?

## டெரரியம் செய்யும் பட்டறை

கரையோற பூந்தோட்டம் மற்றும் ஜேடிசி கார்ப்பரேஷன் ஆகியவை குடிபெயர்ந்த ஊழியர்களுக்கு, டெரரியம் எனப்படும் ஜாடி பூந்தோட்டம் உருவாக்கும் இலவச செய்முறை பட்டறைக்கு ஜனவரி 16 அன்று ஏற்பாடு செய்தது. அங்கு ஊழியர்கள் சொந்தமாக டெரரியம் செய்தனர்!



இந்த மெய்நிகர் பட்டறை, ஜேடிசி சார்ந்த பல்வேறு ஆர்சிகளில் கரையோற பூந்தோட்டப் பணியாளர்களால் நடத்தப்பட்டது. டெரரியம் உருவாக்கும் படிப்படியான வழிமுறைகளை அவர்கள் செய்து காட்டினர்.

## விலங்கியல் தோட்டத்திற்குப் பயணம்

ஜனவரி 23 மற்றும் 30 ஆம் தேதிகளில், வில்லோ தங்குவிடுதியைச் சேர்ந்த குடிபெயர்ந்த ஊழியர்கள் விலங்கியல் தோட்டத்திற்குச் சென்றனர். சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திற்குச் செல்வது நம் குடிபெயர்ந்த ஊழியர்கள் சிலருக்கு

.நமது குடிபெயர்ந்த ஊழியர்களுக்கு விலங்கியல் தோட்டப் பயணதிற்கு ஏற்பாடு செய்த அல்ஃபா டெக்ஏஷியாவிற்கு நன்றி.



நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு **நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப்** பற்றி மேலும் அறிய இங்கே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

அண்மைய செய்திகள் மற்றும் தகவல்களைப் பெற எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!

- மனிதவள அமைச்சின் ஃபேஸ்புக் பக்கம்
- மனிதவள அமைச்சின் யூடியூப் ஒளிவழி
- மனிதவள அமைச்சின் இணையத் தளம்